## திராவிட இயக்க இதழ்கள் - ‘கலை’



திராவிட இயக்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து எத்தனையோ கலைஞர்கள், படைப்பாளிகள் தங்கள் படைப்புகளின் மூலம் அந்தச் சித்தாந்தத்துக்கு ஆதரவு தந்துள்ளனர். அப்படியானவர்களில் இருவர், ‘பாலு பிரதர்ஸ்’ என்று பரவலாக அறியப்பட்ட பாலு மற்றும் சீனு சகோதரர்கள்.

அவர்களைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைய வேண்டும் என்றால், பல விஷயங்களைச் சொல்லலாம். எனினும், உதாரணத்துக்கு இரண்டு. புகழ்பெற்ற திரைப்பட நிறுவனமான ஏ.வி.எம்.மின் லோகோ எழுத்துகளை வடிவமைத்தவர்கள் இவர்கள்தான். அதை விட முக்கியம், அன்றைய பிரபல ஓவியர் வேணுகோபால் சர்மா, திருவள்ளுவர் படத்தை வரைவதற்கு முன்பே, வள்ளுவரைத் தங்கள் தூரிகையிலே கொண்டு வந்தவர்கள் இவர்கள். எந்த ஒரு மத அடையாளமும் இல்லாத அந்த ஓவியத்தைத்தான், நமது கழகம் ஆரம்பக் காலங்களில் தனது கூட்டங்களில் பயன்படுத்தி வந்தது. மட்டுமல்ல, சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற நமது கழகத்தின் முதல் மாநில மாநாட்டு அலங்கார நுழைவுவாயில்களை அமைத்தவர்களும் இவர்களே!

இப்படிப் பல பெருமைகளுக்கு உரிய பாலு சகோதரர்கள் நடத்திய இதழ்தான் ‘கலை’. 1958-இல் தொடங்கப்பட்ட இது, முற்றிலும் சினிமா இதழாக மலர்ந்தது. அன்றைக்கு இருந்த சினிமா பத்திரிகைகளில் வழுவழுப்பான ஆர்ட் பேப்பரில் சினிமா கலைஞர்களை ஓவியமாகத் தாங்கி வந்த ஒரே இதழ் இதுதான்.

இதழைப் பொறுத்த வரையில், அது ஒரு கதம்பப் புதையல். உலக சினிமா குறித்த கட்டுரைகள், திரைக்கதை ஆசிரியர்களைப் பற்றி அறிமுகப்படுத்தும் செய்திகள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

ஒரு இதழில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி, ‘ஆரூர் தந்த அடலேறு. திரைக்கதை வசனம் தீட்டுவதில் தனக்கென ஒரு புதுப்பாதை அமைத்துக்கொண்ட எழுத்து மன்னன். கேளாரும் கேட்ப மொழியும் நல்ல சொல்லேறுழவன்’ என்று குறிப்பிட்டுள்ளது.

சினிமா தவிர, அறிவியல், ஆன்மிகம், கேள்வி பதில், ஸ்டூடியோக்களின் கதை, என அன்றைக்கு சினிமா இதழ்களில் பெரும் புரட்சியைச் செய்துள்ளது இந்த இதழ்.

## :ப்ளாஷ்பேக்





ம.பிரவீன்

### தந்தை வழியில் கழகப் பணி!

2015-ஆம் ஆண்டு என்னுடைய தந்தை சு.கி.மதியழகன் அவர்கள் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார், அப்போது, புரசைவாக்கம் தொகுதியில் சிறப்பாகப் பணியாற்றிய காரணத்திற்காக இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அவர் வழியில் இன்றைக்கு நானும் கழகப் பணியாற்றி வருகிறேன்.

– ம.பிரவீன், புரசைவாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### காரியதரிசிகள்!

1940-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 தேதிகளில் நீதிக்கட்சியின் 15-வது மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிறகு, நடைபெற்ற முதல் மாநாடு இது. இம்மாநாட்டில் மீண்டும் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கி.ஆ.பெ.விசுவநாதம் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அறிஞர் அண்ணா இணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காரியதரிசி, கூட்டுக் காரியதரிசி என்றே, அப்போது இப்பொறுப்புகள் அழைக்கப்பட்டு வந்தன.

## மாநாடு

ர.பிரகாசு **37**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# தனித்து நிற்கும் தமிழ்நாடு!

*ஒன்றிய அரசின் அமைச்சகங்கள், குடியரசுத் தலைவர் அலுவலகம், உச்ச நீதி மன்றம் உள்ளிட்ட அதிகாரமிக்கப் பதவிகளைப் பார்ப்பனர்களே இப்போதும் ஆக்கிரமித்து வைத்திருப்பதைப் போலத்தான், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மதராஸ் மாகாணத்திலும் நிலைமை இருந்தது. அத்தகைய பார்ப்பனீய மேலாதிக்கத்தைத் தகர்க்கவே நீதிக்கட்சி உருவானது, சுயமரியாதை இயக்கம் முளைத்தது. கல்வியில்-வேலை வாய்ப்பில் பார்ப்பனரல்லா தோருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வேண்டுமென்று குரல் எழுப்பியது.*

*பார்ப்பனீய சித்தாந்தத்திற்கு எதிரான, இவ்வியக்கங்களின் தாக்கம் எத்தகைய வீரியமிக்கதாக இருந்தது என்பதை உணர்த்தும் மாநாடுதான் 1927-ஆம் ஆண்டு, அக்டோபர் 22, 23 ஆகிய 2 நாட்கள் சென்னையில் நடைபெற்ற ‘சென்னை மாகாண பார்ப்பனரல்லாத வாலிபர் முதல் மாநாடு’. முதல் சுயமரியாதை மாநாடு செங்கல்பட்டில் நடைபெறுவதற்கு, 15 மாதங்களுக்கு முன்பே இம்மாநாடு நடைபெற்றுள்ளது. பீப்பிள்ஸ் பார்க் மைதானத்தில் நாயர் பெயரில் அமைக்கப்பட்டிருந்த பெரும் கொட்டகையில் மாநாடு நடை பெற்றது. அன்றைய பெங்களூரு சட்டமன்ற உறுப்பினரும், நகராட்சித் தலைவருமான ஜனாப் மகமத் அப்பாஸ் கான் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தீபாவளிக்கு முந்தைய நாள் என்பதையும் பொருட்படுத்தாமல், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டனர்.*

*“மனு சாஸ்திரத்தையும் அதை ஆதாரமாகக் கொண்ட புராணங்களையும் தடை செய்ய வேண்டும், சூத்திரன் என்று யாராவது அழைத்தால் கடுங்காவல் தண்டனை அளிக்க வேண்டும், பச்சையப்பன் கல்லூரியில் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்க வேண்டும், தேவதாசி ஒழிப்பு மசோதாவுக்கு ஆதரவு, குடும்பச் சொத்துக்களில் ஆண்களுக்கு உள்ளது போலவே பெண்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டும், விதவைகளான பெண்களுக்கும் குடும்பச் சொத்தில் தங்கள் புருஷர்கள் இருக்கும் போது அனுபவித்து வந்த வாழ்க்கையையே அளிக்க வேண்டுமே அல்லாமல் ஜீவனாம்சம் என்பதாகச் சொல்லிக் கொண்டு வக்கீல் வீடுகளிலும் கோர்ட்களிலும் அலையாதிருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்” எனப் பல அதிரடியான தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.*

*இம்மாநாட்டில் பெரியார் மட்டுமின்றி, திராவிட இயக்கப் பெண் போராளிகள் அலமேலு மங்கைத் தாயாரம்மாள், கிருஷ்ணாபாய், பாரிஜாதம், இந்திராணி பாலசுப்ரமணியம் உள்ளிட்ட பெண்கள் பலரும் எழுச்சி உரையாற்றினர்.*

*“ஒரு நாடு விடுதலை அடைய வேண்டுமானால் அந்நாட்டு வாலிபர்களுக்கு விடுதலை உணர்ச்சி வர வேண்டும் என்கின்ற ஆப்த வாக்கின்படியே (பெரியோர் கூற்று) நமது நாட்டுக்கு இப்போது விடுதலை அறிகுறிகள் காணப்படுகின்றன” என்று பாராட்டினார் பெரியார். மேலும், “இம்மகா நாடானது அளவுக்கு மேல் வெகு விமர்சையாகவும் அதி ஊக்கமாகவும், மிகத் தாராள நோக்கத்துடனும் நடைபெற்றதானது நமது நாடு விழித்துக் கொண்டதென்பதையே காட்டுகிறது. அதில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் உலகத்தையே மூடநம்பிக்கையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை செய்யத் தகுந்த, அவ்வளவு சக்தி அடங்கியவைகளாகவே இருந்தன” என்றார் பெரியார்.*

*ஒரு நூற்றாண்டாகத் தகித்துக்கொண்டிருக்கும் அந்தச் சுயமரியாதை சிந்தனைதான் கல்வியறை முதல் கருவறை வரை ஆரிய ஆதிக்கத்தில் இருந்து, தமிழ்நாடு விடுபட்டுத் தனித்துவமாக நிற்கக் காரணமானது என்றால் மிகையல்ல.*

**...கூட்டம் திரளும்**

**சுயமரியாதை சிந்தனைதான் கல்வியறை முதல் கருவறை வரை ஆரிய ஆதிக்கத்தில் இருந்து, தமிழ்நாடு விடுபட்டுத் தனித்துவமாக நிற்கக் காரணமானது என்றால் மிகையல்ல.**

## பாசறை படிப்பறை


கௌதம் ராஜ் **37**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# அம்பேத்கர் எனும் பேராயுதம்!

*கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் பாபா சாகேப் அம்பேத்கர் குறித்து, ஆங்கிலத்தில் 5 வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளியாகி இருக்கின்றன. சசி தரூர், அசோ கோபால் போன்றவர்கள் அம்பேத்கரின் முழு வாழ்வையும் பற்றி எழுதி உள்ளனர். அம்பேத்கரின் தொடக்கக் காலம் குறித்தும், லண்டனில் அவர் வசித்த போது நடைபெற்ற சம்பவங்களையும் மட்டும் கொண்டு, இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளியாகி இருக்கின்றன.*

*அந்த வரிசையில், அவற்றிலிருந்து தன்மையிலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்டு தனித்தன்மையுடன் வெளியாகி இருக்கிறது சமூகச் செயற்பாட்டாளர் ஆனந்த் டெல்டும்டே எழுதிய ‘Iconoclast: A Reflective Biography of Dr Babasaheb Ambedkar’ என்ற நூல். அம்பேத்கரின் பெயர்த்தியான ரமாவை மணந்தவர் ஆனந்த டெல்டும்டே, அந்த வகையில், அவருக்குக் கிடைத்த பல அரிய புகைப்படங்களோடும், சுவாரசியம் நிறைந்த சம்பவங்களோடும் இந்நூலை எழுதி இருக்கிறார். பென்குயின் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டிருக்கிறது.*




*வழக்கமாக வாழ்க்கை வரலாற்று நூல்கள் அந்தந்த ஆளுமையின் மறைவுடன் நிறைவு பெற்றுவிடும், இந்தப் புத்தகத்தில் அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு இன்று வரை அவரைச் சுற்றி நடைபெறும் அரசியலும், அதனூடாக மாறிவரும், அவரது முக்கியத்துவமும் கவனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நூலில் அம்பேத்கர் பிறந்த 1891-ஆம் ஆண்டு தொடங்கி, 2023-ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகள் கால வரிசையில் 8 அத்தியாயங்களாகப் பிரித்து எழுதப்பட்டிருக்கின்றன.*

*போற்றிப் பாராட்ட வேண்டிய இடங்களில் போற்றியும், விமர்சிக்க வேண்டிய இடங்களில் விமர்சித்தும், உண்மைகளைக் களைய வேண்டிய இடங்களில் அவற்றை விளக்கியும், இந்நூலை எழுதி இருக்கிறார் ஆனந்த் டெல்டும்டே. இதுவரை எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில் உள்ள தலித் தலைவர்களிடையேயும் சாதி ஒழிப்பு இயக்கங்களிடமும் குறிப்பாகத் தந்தை பெரியாருடன் அம்பேத்கர் கொண்டிருந்த தொடர்பையும் இவர்களுக்கிடையில் நடைபெற்ற சந்திப்பையும் குறித்து, இந்நூல் அதிகமான செய்திகளைக் கொண்டு வெளியாகியிருக்கிறது.*

*அம்பேத்கரின் வாழ்க்கைச் சம்பவங்களைக் கடந்து, அவர் வாழ்ந்த காலத்தில் சர்வதேச அளவிலும், இந்திய அளவிலும், உள்ளூர் அளவிலும் நிலவிய அரசியல் சூழலை இந்த நூல் முழுக்க டெல்டும்டே கவனப்படுத்துகிறார்.*

*தனிமனித மற்றும் உருவ வழிபாடுகளுக்கும், புனிதப்படுத்துதலுக்கும் நேரெதிரானவர் அம்பேத்கர். சிலைகளைக் காட்டிலும் சிந்தனையும் சித்தாந்தமும் முக்கியமெனக் கருதியவர். ஒரு சித்தாந்தத்தை மழுங்கடிக்க, அந்தச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்த ஆளுமையை வழிபட வேண்டும், அவரது சிந்தனையைப் புறக்கணித்து வெறும் புகழைப் பரப்ப வேண்டும், பிறகு அவர் பேசி எழுதியவற்றை எளிதாகத் திரிக்க முடியும், அவரது சித்தாந்தத்தைச் சிதைக்க முடியும்.*

*இன்றைக்குப் பல்வேறு இந்துத்துவ சக்திகள் அம்பேத்கரை அபகரிக்க இந்த வழிமுறையைத்தான் கைக்கொண்டுள்ளனர். அந்த வகையில், அம்பேத்கர் எனும் பேராயுதத்தை மொய்த்துக் கொண்டிருக்கும் இந்துத்துவ ஈக்களின் மீதும் அவரைப் புனிதப்படுத்திப் பூசைப் பொருளாக வைத்திருப்பவர்களுக்கு எதிராகவும் எறியப்பட்டுள்ள முதல் கல் இந்த நூல்.*


**...வாசிப்போம்.**

**அம்பேத்கர் எனும் பேராயுதத்தை மொய்த்துக் கொண்டிருக்கும் இந்துத்துவ ஈக்களின் மீதும் அவரைப் புனிதப்படுத்திப் பூசைப் பொருளாக வைத்திருப்பவர்களுக்கு எதிராகவும் எறியப்பட்டுள்ள முதல் கல் இந்த நூல்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**657**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131